Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 100/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW4 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | கீத்திகா |
| Father's Name | – | நித்தியானந்தம் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 17th November 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present.

**முதல் விசாரணை** :

நான் சம்பவ சமயத்தில் ராகவேந்திரா நகரில் குடியிருந்து வந்தேன். தற்போது வெங்டேசா காலனியில் குடியிருந்து கொண்டு வருகிறேன். அசா 1 எனது தாயார் ஆவார். ஆஜர் எதிரி எனது அப்பா ஆவார் . கடந்த 27.03.2017 ந் தேதி எனக்கு பொதுத்தேர்வு முடிந்து நான் வீட்டுக்கு மாலை 04.00 மணி அளவில்வீட்டுக்கு வந்த போது நான் வழக்கம்போல சாமி கும்பிட பூ பறிக்க வீட்டிற்கு வெளியே வந்தேன். அப்போது பூ பறிக்கும் போது வீட்டினுள் சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்தேன். அப்போது எனது அம்மாவை அடித்து காய் வெட்ட வைத்திருந்த கத்தியை எடுத்து கை யை அறுத்துவிட்டார்.

அதனால் எனது அம்மாவிற்கு இடது கையில் மோதிரவிரலில் பாதிப்பு ஏற்பட்டது நானும் எனது தம்பியும் தடுக்க முயற்சி செய்தோம்,. எங்களை தள்ளி விட்டுவிட்டு எனது அம்மாவின் தலைமுடி யை பிடித்து கீழே தள்ளி நகர முடியாதபடி பிடித்துக்கொண்டார்.
எனது அம்மாவை விடுவிக் கமுயற்சி செய்தோம் அவர் தள்ளிவிட்டதில் எனக்கு தோள்பட்டையில் அடி பட்டது.

நான் எனது அம்மாவை எழுப்பி அறைக்குள் சென்று பூட்டிவிட்டேன். எனது மாமா என்னை அவரது வீட்டிற்கு அழைத்து செல்வதற்காக வந்து கொண்டிருந்தார். பின்னர் எனது அம்மாவை அழைத்துக்கொண்டு பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு வந்தோம். அங்கு சிகிச்சை பெற்று நாங்கள் உடுமலைப்பேட்டையில் உள்ள எனது மாமா வீட்டிற்கு சென்று விட்டோம், போலிசார் சம்பவம் குறித்து மறுநாள் விசாரித்தனர். தற்போது என்முன் காட்டப்படும் கத்திதான் எனது அம்மாவை தாக்கிய கத்தியாகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த சமயம் ஆச்சிபட்டியில் உள்ள பரத் வித்யா நிகேதன் மேல்நிலைப்பள்ளியில் படித்து வந்தேன். சம்பவ சமயம் எனக்கு தேர்வு முடிந்துவிட்டது என்றால் இல்லை. கடைசி தேர்வு 28.03.2017 அன்று ஆகும், அந்த தேர்வு பொள்ளாச்சியில் தான் நடந்தது.

சம்பவ நாள் அன்று தேர்வு காலை 09.00 மணிமுதல் 12.30 வரை நடந்தது. தேர்வு முடிந்து வீட்டிற்கு வந்த பின்பு சுமார் 05.00 மணிக்கு சம்பவம் நடந்தது. சம்பவம் நடக்கும் போது நான் வீட்டின் வெளியே பின்புறத்தில் பூ பறித்துக் கொண்டிருந்தேன். சத்தம் கேட்டு வீட்டிற்குள் சென்று பார்த்தேன்.

அப்போது எனது அம்மா காயத்துடன் இருந்தார் என்றால் சரிதான். சத்தம் கேட்டு அக்கம் பக்கம்வீட்டார் வந்து பார்த்தார்கள் என்றால் சரிதான், சம்பவம் நடக்கும் போது எனது தம்பி நிரஞ்சன்குமாரும் இருந்தார் என்றால் சரிதான்.

வீட்டினுள் போகும் போது சமையல் அறையில் தான் சம்பவம் நடந்தது. எனது அம்மாவை கீழே தள்ளி நகர முடியாமல் பிடித்துக் கொண்டார் என போலிசார் விசாரணையில் கூறி னேனா என்றால் தற்சமயம் எனக்கு நினைவு இல்லை. போலிசாரிடம்அவ்வாறு கூறவில்லை என்பதால் நினைவு இல்லை என சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயம் என்னையும், எனது தம்பியையும் எனது அப்பா தள்ளிவிட்டார் என போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான், மேற்படி சங்கதியை நான் போலிசாரிடம் கூறவில்லை என்றால் சரியல்ல,

எனது அம்மாவை கத்தியில் எந்த கையில் அறுத்தார் என்று எனக்கு தெரியாது என்றால் நினைவு இல்லை,. இது சம்மந்தமாக போலிசார் விசாரணையில் கூறவில்லை. எனது அம்மாவின் இடது கை மோதிரவிரல் உடைந்துவிட்டது, மேற்படி விவரத்தை நான் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன்.

எனது மாமா சம்பவ நாள் அன்று எத்தனை மணிக்கு வந்தார் என்றால் சம்பவம் நடந்து முக்கால் மணி நேரம் கழித்து தான் வந்தார். அப்போது எனது மாமாவும் ராமமூர்த்தியும் வந்தார்கள். சம்பவ இடத்திற்கு எனது மாமாவும் ராமமூர்த்தியும் வரவில்லை என்றால் சரியல்ல.

நான்சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், எனது அப்பா அம்மாவை தாக்கவில்லை என்றாலும் என்னையும் தம்பியையும் தள்ளி விடவில்லை என்றாலும், சரியல்ல. நான் எனது அம்மாவுடன் தான் இருக்கிறேன். எனது அம்மாவிற்கு எனது அப்பாவின் மீது வெறுப்பு உள்ளதாலும் நான் என் அம்மாவுடன் இருந்து வருவதால் எனது தாயாருக்குஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
சாபெ1ற்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam.,B.A.,B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.